1971 அக்டோபர் 23]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவ மனைகளுக்கு வழங்கப்படுகிற மருந்துகளைக் குறித்து தொடர்ந்து ஆராயப்படவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. மருத்துவ மனைகளில் ஆகிற செலவில் முக்கால் பங்குச் செலவு மருந்துகளுக்காக ஆகிறது. எல்லோருக்கும் தேவைப்படுகிற மருந்துகள் 20 விழுக்காடு செலவிற்கு வருகிறது. சிலருக்குத் தேவைப்படுகிற மருந்துகள் 5 விழுக்காடு என்ற நிலையில் இருக்கிறது. மிகச் சிலருக்குத் தேவைப்படுகிற மருந்துகள் இருக்கின்றன. மிகமிகச் சிலருக்குத் தேவைப்படும் மருந்துகளுக்கு அவற்றை வாங்கி வைத்துக்கொள்ள அதிகச் செலவு ஆகிறது. அந்தச் சில மருந்துகள், அதிகத் தொகையை விழுங்கி விடுகிறது. ஆகவே, அப்போதைக் கப்போது, தேவைப்படுகிற நேரத்தில், இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தேவைக்கேற்ப, நிலைமைக்கேற்பத்தான் வாங்க முடியுமே தவிர அவை எல்லாக் காலத்திலும் வாங்கி வைக்க இயலாதவை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திருப்பூர் அரிசன மாணவ விடுதிகளுக்கு வானொலிப்பெட்டி

* 36. **வினா.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள அரசினர் மாணவர், மாணவியர் அரிசன விடுதிக்கு வானொலிப் பெட்டி வழங்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் அரசினர் மாணவர், மாணவியர் விடுதிகளில் வானொலிப் பெட்டிகள் கொடுப்பதன் மூலம் வானொலி மூலம் கற்பிக்கப்படுகிற பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். அதோடு அவர்களது பொது அறிவையும் பெருக்கிக் கொள்ள அது உதவியாக இருக்கும். ஆகவே அரசினர் மாணவர், மாணவியர் விடுதிகளுக்கு வானொலிப் பெட்டிகள் வாங்கி வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாணவர்கள் விடுதிகளுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்குவது என்பது பொதுக் கொள்கை. ஒரு கொள்கை என்றால் எல்லாவிடங்களிலும் வைக்க ஆலோசிக்கவேண்டும். வானொலிப் பெட்டிகள் வைத்தால் அவர்கள் இசையைக் கேட்டுக்கொண்டு நேரத்தினைக் கழித்து விடுவார்கள். பொதுமக்களின் வசதிக்காக வைப்பது வேறு. ஆனால் விடுதிகளில் வைப்பது அவ்வளவு சரியான கருத்து அல்ல.

செங்கற்பட்டு மாவட்டத்தில் புது வருவாய்க் கோட்டம்

* 37. **வினா.—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில், பொன்னேரி வட்டம், கும்முடிப்பூண்டித் துணை வட்டம், பென்னலூர்பேட்டைத் துணை வட்டம் ஆகியவற்றை இணைத்து தனிக் கோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.